**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**STC.NO- 264/2024**

**Dated :09.02.2026**

**Deposition of witness for : D.W.1**

**Cross Continuation of DW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜாபர் | வயது | : | 46 |
| தந்தை பெயர் | : | ஜக்கரியா | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | கந்தர்வகோட்டை | தொழில் | : | ரியல் எஸ்டேட் தொழில் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**புகார் தாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**ராதா, முகம்மது மைதீன் மற்றும் நான் எத்தனை வருடங்கள் பழக்க வழக்கமாக இருந்து வருகின்றோம் என்றால் சுமார் 20 வருடங்கள் பழக்கமாக இருந்து வருகிறோம். வழக்கு காசோலை கண்ட தொகை எவ்வளவு என்று தெரியுமா என்றால் தெரியாது. காசோலை கொடுக்கப்பட்ட தேதி தெரியுமா என்றால் தெரியாது. காசோலையை பூர்த்தி செய்தது யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். காசோலையை எந்த தேதியில் புகார்தாரருக்கு கொடுத்தார் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். எந்த வங்கி காசோலையை எதிரி புகார்தாரருக்கு கொடுத்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. காசோலையை எந்த தேதியில் புகார்தாரர் வசூலுக்கு தாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. காசோலை எந்த காரணத்திற்காக திருப்பப்பட்டது என்பது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நானும் எதிரி மைதீனும் ஒன்றாக ரியல் எஸ்டேட் தொழில் செய்தோமா என்றால் நான் அவரிடம் வேலை பார்த்தேன். எதிரி புகார்தாரரின் அம்மாவிடம் சொத்து வாங்கியதாக நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். எதிரி மைதீன் புகார்தாரரிடம் சொத்து ஏதும் வாங்கவில்லை என்றால் அவரிடமும் வாங்கியுள்ளார். எந்த சர்வே எண்ணில் கண்ட சொத்தினை**

கிரையம் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. 2010 ஆம் ஆண்டு எதிரி புகார்தாரரிடம் சொத்து வாங்கியது எனக்கு தெரியும் என்றால் சரிதான். கிரைய தொகை பல லட்சம் ரூபாய் இருக்கும் என்றால் சரிதான். அந்த தொகையை வாங்கி நான் தான் புகார்தாரருக்கு கொடுத்தேன் என்றால் சரிதான். விண்லேண்ட் புரோமோட்டர்ஸில் புகார்தாரர் பங்குதாரராக இருந்தார் என்றால் சரியில்லை. விண்லேண்ட் புரோமோட்டர்ஸ் நிறுவன மூலமாக எதிரி எந்தெந்த சர்வே எண்ணில் கண்ட சொத்துக்களை வாங்கினார், யார் யாருக்கு விற்பனை செய்தார் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரியும் புகார்தாரரும் கூட்டு சேர்ந்து எத்தனை வருடங்களாக சொத்துக்களை விற்பனை செய்திருப்பார்கள் என்றால் சுமார் 12 வருடங்களாக விற்பனை செய்தார்கள். அவ்வாறு கூட்டாக சேர்ந்து விற்பனை செய்த போது இருவரும் பெற்ற கிரைய தொகைகளை குறித்தும் அதனை அவர்கள் எவ்வாறு பிரித்து கொண்டார்கள் என்பது குறித்தும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கடந்த 31.01.2015 ஆம் தேதி எதிரியும் புகார்தாரரும் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டுள்ளார்கள் என்றாலும் அதில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றாலும் சரியில்லை. தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் 31.01.2015 ஆம் தேதியிட்ட ஒப்பந்தத்தில் கண்ட 2வது சாட்சி கையொப்பம் என்னுடையதா என்றால் இல்லை. அந்த கையொப்பம் என்னுடைய தான் என்றாலும் வழக்கிற்காக இல்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 2010 ஆம் ஆண்டிலிருந்து புகார்தாரர் நிலம் வாங்கி விற்ற வகையில் வசதியாக இருந்தார் என்றால் சரிதான். எதிரி தஞ்சாவூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த தேதி தெரியுமா என்றால் தெரியும். 07.11.2016 ஆம் தேதி கொடுத்தார். அந்த புகாரில் காவல் துறையினர் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. எதிரி அந்த புகார் மனுவில் என்ன எழுதி கொடுத்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. காசோலை மற்றும் ஆவணங்கள் காணாமல் போய்விட்டதாக புகார் அளித்தார். அந்த புகாரில் காசோலை எண் மற்றும் எந்த தேதியிட்ட ஆவணங்களை பற்றி குறிப்பிட்டுள்ளார் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது குறுக்கு விசாரணையில் 07.01.2016 ஆம் தேதி 11.00 மணிக்கு புகார்தாரர் 5,6 நபர்களுடன் வந்து பிரச்சனை செய்ததாக ஏற்கனவே சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் மேற்படி புகார் எவ்வாறு விசாரிக்கப்பட்டது எந்த அடிப்படையில் முடிக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரி தற்போது எங்கு உள்ளார் என்றால் திருச்சியில் உள்ளார். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளாரா என்றால் இல்லை. எதிரியின் திருச்சி முகவரி தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. புகார்தாரரின் சகோதிரிகள் எந்த சர்வே எண்ணில் கண்ட சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சர்வே எண் தெரியாது. எந்த நீதிமன்றத்தில் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கு எந்த வருடம் நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் காண்பிக்கப்பட்டது

என்று தெரியுமா என்றால் தெரியாது. தஞ்சாவூரில் எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் நான் எதிரியின் உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. தஞ்சாவூர் காவல் நிலையத்தில் எதிரி அளித்த புகார் மனு உண்மை தன்மை இல்லை என்று கூறி முடிக்கப்பட்டுவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி தற்போதும் கந்தர்வகோட்டையில் உள்ள அவரது வீட்டில் தான் வசித்து வருகிறார் என்றாலும் திருச்சியில் வசிப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. புகார்தாரரின் சகோதரிகள் தாக்கல் செய்த வழக்கினை எதிரி ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு பணம் கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விண்லேண்ட் புரோமோட்டர்ஸ் மூலமாக எதிரி சொத்துக்களை விற்பனை செய்து அபலாபமாக அடைந்து கொண்டார் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய்யானது என்றாலும் அது இந்த வழக்கில் ஏற்றுக்கொள்ளக்கூடியது இல்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.02.09 16:03:48 +0530

**நா.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**